**செ.வெ.எண்: 550** **நாள்: 27.09.2021**

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**தொழிற்பழகுநர் பயிற்சிக்கான சேர்க்கை முகாம் நடைபெற உள்ளது.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு/ தனியார் ஐடிஐ -ல் படித்து, 2017, 2018, 2019-ம் ஆண்டு அகில இந்திய தொழிற்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர்களுக்காக வருகின்ற 08.10.2021 அன்று காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை தொழிற்பழகுநர் பயிற்சிக்கான சேர்க்கை முகாம் புதுக்கோட்டையில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற உள்ளது.

இந்த முகாமில் அரசு மற்றும் தனியார் துறையைச் சார்ந்த பல முன்னணி நிறுவனங்கள் கலந்துகொண்டு தங்களது நிறுவனங்களுக்கு தேவையான தொழில்பழகுநர்களை தேர்வு செய்ய உள்ளனர். இதில் கலந்துகொள்ள உள்ள மாணவ/மாணவியர்கள் தங்களது அசல் கல்விச் சான்றிதழ்களை கொண்டுவர வேண்டும். தொழில் பழகுநராக தேர்வு செய்யப்படும் மாணவ/மாணவியர்களுக்காக மாதந்தோறும் உதவித்தொகை வழங்கப்படும். தொழில்பழகுநர் பயிற்சியின் முடிவில் மத்திய அரசால் தேர்வு நடத்தப்பட்டு சான்றிதழும் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**